02.12.2025 பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண். 7 /2020 ) திருமதி.வாசலட்சுமி.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) இந்த வழக்கில் நான் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவாச்சொத்து வடக்கு பார்த்து அமைந்த மாட்டு தொழுவம் என்றால் சரிதான். அதற்கு கிழக்குபக்கம் வாதிகளுக்குப் பாத்தியப்பட்ட ஜெயலட்சுமி மற்றும் குருசாமி வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கு பக்கம் கருப்பாயி என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கே எங்கள் குடும்பத்திற்கு பாததியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு தற்சமயம் திரு.வாசக்குமார் என்பவரின் பெயரில் தீர்வை செலுத்தி வருகிறோம் என்றால் சரிதான். வாசக்குமார் பெயரில் எவ்வளவு நாட்களாக தீர்வை செலுத்தி வருகிறோம் என்றால் எனது அப்பா உயிருடன் இருக்கும் காலத்திலிருந்தே செலுத்தி வருகிறோம். அந்த சொத்தானது எனது அப்பா, எனது தம்பி வாசக்குமாருக்கு கொடுத்த சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தான வீடும், மற்றும் இந்த வழக்கின் தாவாச்சொத்தும் வார்டு எண்.7ம் நம்பரில் அமைந்துள்ளது என்றால் தெரியவில்லை. வாசக்குமார் பெயரில் உள்ள வீட்டின் கதவு எண்.81 என்றால் சரிதான். அதன் அருகில் இராமச்சந்திரன் வீடு உள்ளது என்றால் சரிதான். வாசக்குமார் பெயரில் உள்ள கதவு எண்.81ன் பழைய கதவு எண்.98 என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மேற்கே உள்ளஜெயலட்சுமி,குருசாமி ஆகியோர்கள் வீடுகள் கதவு எண்.97டி,97ஈ என்றால் சரிதான். தற்சமயம் கதவு எண்.97டி,97ஈ-க்குரிய புதுக்கதவு எண் 79,80 என்றால் அது பற்றி தெரியாது. தாவாச்சொத்திற்கு மேற்கே 3அடி பொது சந்தும், நாராயணசாமி கோவிலும் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் 76டி என்ற பசுமை வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் பழைய கதவு எண்.49கே 1 என்றால் சரிதான். அந்த வீட்டுக்கு அருகில் எனது தாயாருக்கு கதவு எண்.49ஏ3 என்ற சே.காளியம்மாள் பெயரில் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் புது கதவு எண்.49/3 என்றால் சரிதான். எனது பெயரிலும், எனது தாயாரான காளிம்மாள் பெயரில் உள்ள வீடு ஊருக்கு வெளியே அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2) அதற்குரிய நடைபாதை சம்பந்தமாக நானும், இராமலட்சுமி சேர்ந்து சுப்புலட்சுமி, சுப்பிரமணியனுக்கு எதிராக வழக்கு எண்.120/2017 வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் பி.வா.சா.ஆ.1 வரிசை. எனது தாயார் பெயரில் ஊருக்கு வெளியில் உள்ள வீட்டிற்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீது என்றால் சரியல்ல ஊருக்கு உள்ளே உள்ள வீட்டிற்குரியது. தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணம் எனது சகோதரர் வாசக்குமார் பெயரில் உள்ள தீர்வை ரசீது என்றால் சரிதான். எனக்கு வயது என்னவென்றால் 40 வயது. 45 வருடங்களுக்கு முன்பு எங்கள் குடும்பத்தில் என்ன நடந்தது என்பது பற்றி நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு தாவாச்சொத்திற்குரிய பட்டா, சர்வே எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான. குறிப்பிட்ட கதவு எண் கொண்ட கட்டிடம் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து வாதிகளுக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்டு அவர்களின் பெயரில் பட்டா இருந்துவருகிறது என்றால் இல்லை. தாவாச்சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவாச்சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டு 2000 ஆம்வருடத்திலிருந்து எனது தகப்பனார் வாதிகளின் அனுமதியின் பேரில் அனுபவம்செய்துவருகிறார் என்றாலசரியல்ல. தற்சமயம்வாதிகளுக்குதாவாச்சொத்து தேவைப்படுவதால் காலிசெய்யக்கோரி சொல்லியதை மறுத்துவருகிறோம் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதால் பிரதிவாதிகள்அனைவரும் ஒப்படைக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தான மாட்டுக்கொட்டைக்கு தென்பக்கம் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட குழியல் அறை அமைந்துள்ளது என்றால் இல்லை. மாட்டுக்கொட்டைக்கு கதவு எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால கதவு எண் இல்லை. நான் எனது தாயாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. 45 ஆண்டுகாலமாக தாவாச்சொத்தை அனுபவம் செய்துவருவதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
02.12.2025.